இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

யூபிலி திருப்பயணமும், திருத்தந்தையைச் சந்திக்கும் வாய்ப்பும், வெனிஸ் உயர் மறைமாவட்டத்தின் சிறைக்கைதிகளுக்கான ஆன்மிக பராமரிப்பின் தொடர்ச்சியான மற்றும் முழுமையான அர்ப்பணிப்பு முயற்சிகளின் ஒரு பகுதியாகும் என்றும் உரைத்துள்ளார் பேராயர் மொராலியா.

# அழியா அடையாளத்தை ஏற்படுத்தும் திருத்தந்தையின் சந்திப்பு


வெனீஸ் திருப்பயணிகளைச் சந்திக்கும் திருத்தந்தை 14-ஆம் லியோ

ஆகஸ்ட் 7, வியாழனன்று, வெனிஸ் நகரின் னய மேரி மேஜர் சிறைச்சாலையில் உள்ள மூன்று கைதிகளை, அந்நகரின் திருப்பயணக் குழுவோடு சந்தித்தார் திருத்தந்தை 14-ஆம் லியோ.

திருப்பயணமும், திருத்தந்தையுடன் நடந்த சந்திப்பும் கைதிகளின் ஆன்மா, வாழ்க்கை மற்றும் வரலாற்றிலும், அவர்களுடன் பயணித்த ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களின் மனதிலும், சிறைக்கைதிகளை சமூக வாழ்வில் மீண்டும் இணைக்கும் மறைமாவட்டப் பணியில் ஈடுபட்டிருக்கும் அனைவரின் மனதிலும், அழியாத அடையாளத்தை விட்டுச் செல்லும் என்று வெனிஸ் முதுபெரும் தந்தை பேராயர் மொராலியா தெரிவித்துள்ளார்.

யூபிலி திருப்பயணமும், திருத்தந்தையைச் சந்திக்கும் வாய்ப்பும், வெனிஸ் உயர் மறைமாவட்டத்தின் சிறைக்கைதிகளுக்கான ஆன்மிக பராமரிப்பின் தொடர்ச்சியான மற்றும் முழுமையான அர்ப்பணிப்பு முயற்சிகளின் ஒரு பகுதியாகும் என்றும் உரைத்துள்ளார் பேராயர் மொராலியா.

ஏறக்குறைய 500 கிலோமீட்டர் நீளம் கொண்ட யூபிலி திருப்பயணத்தின் இறுதி 100 கிலோமீட்டரை, இத்தாலிய நகரமான தெர்னியிலிருந்து உரோமை நகர் வரை நடைபயணம் மேற்கொண்ட இத்திருப்பயணிகள், வெனிஸ் நகரின் முதுபெரும் தந்தை பேராயர் பிரான்செஸ்கோ மொராலியா, சிறைக்கூடத் தலைவர் அருள்பணியாளர். மாஸ்ஸிமோ காதாமூரோ மற்றும் மறைமாவட்ட அதிகாரிகளுடன் திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்களைச் சந்தித்தனர்.

திருத்தந்தையுடனான இந்த சந்திப்பு, நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தங்களின் திருப்பயண அனுபவத்தை உண்மையாக நிறைவு செய்யும் ஒரு நிகழ்வு என்று தெரிவித்துள்ளார் அருள்பணியாளர் காதாமூரோ.

மேலும், அச்சிறைக்கைதிகள், ஆன்மிக அர்த்தம் கொண்ட இத்திருப்பயணத்தில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெற்றது பெருமை அளிப்பதாக னய மேரி மேஜர் சிறைச்சாலை இயக்குநர் என்ரிக்கோ பாரினா அவர்கள் கூறியுள்ளார்.

ஜெர்சிலின் டிக்ரோஸ் - வத்திக்கான்

# மனித விழுமியங்களை உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும்



UCAP மாநாட்டில் பங்கேற்றோர்

செயற்கை நுண்ணறிவு யுகத்தில் மனித விழுமியங்களை உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும் என்றும், தொழில்நுட்பம் மனித மாண்பை மதிப்பிழக்கச் செய்வதால் ஆபத்துக்கள் ஏற்படுகின்றன என்றும் எச்சரித்துள்ளது வத்திக்கானின் தகவல் தொடர்புத் துறை.

ஆப்ரிக்காவின் அக்ராவில் உள்ள கானா பகுதியில் ஆகஸ்டு 10 முதல் 17 வரை நடைபெற்ற பத்திரிக்கை மாநாட்டின் தொடக்கத்தில் பங்கேற்றபோது இவ்வாறு எடுத்துரைத்தார் பேரருள்திரு ஜான்வியர் யாமியோகோ.

சமூகத்தொடர்புக்கான திருப்பீடத்துறையின் தலைவர் பவுலோ ரூபினி அவர்களின் சார்பாக பத்திரிக்கையாளர்களிடம் உரையாற்றிய யாமியோகோ அவர்கள், "வரலாற்றை இதயத்தின் புத்திசாலித்தனத்துடன், அன்பின் ஞானத்துடன், அதன் வழிமுறைகள் மற்றும் முடிவுகள், உண்மை மற்றும் பொய்கள், உள்ளுணர்வு மற்றும் கணக்கீடுகளை குழப்பாமல் படித்து சொல்ல வேண்டும் என்றும், இதற்கு நாம் செய்ய வேண்டியது மனிதனாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

"செயற்கை நுண்ணறிவு யுகத்தில் தொழில்நுட்ப முன்னேற்றத்தையும் மனித மதிப்புகளைப் பாதுகாத்தலையும் சமநிலைப்படுத்துதல்" என்ற தலைப்பில் நடைபெற்று வரும் ஆப்ரிக்க பத்திரிக்கையாளர்களுக்கான இக்கூட்டத்தில் "'தொடர்பு' என்ற இலத்தீன் வேர்ச்சொல்லானது [‘cum’ (together) ‘munus’ (gift)] ஒன்றாக மற்றும் கொடை என்னும் இரண்டு சொற்களை இணைக்கிறது என்றும், தகவல்தொடர்பு என்பது முதன்மையாக நமது நல்லிணக்கக் கொடை, நாம் ஒருவருக்கொருவர் ஏற்படுத்தும் உறவிலிருந்து பிறக்கும் ஒரு கொடை என்பதை நமக்கு எடுத்துச் சொல்கிறது என்றும் கூறினார் யாமியோகோ.

செயற்கை நுண்ணறிவால் ஏற்படும் சவால்கள் பற்றி எடுத்துரைக்கையில், "எல்லாவற்றையும் னள் னளாக்கி, உண்மையான, நீதியான மற்றும் அழகானவற்றைப் புறக்கணிக்கும் ஆதிக்க அமைப்பின் அபாயம் கொண்டதாக அது இருக்கின்றது என்றும், தனித்துவம், மாண்பு போன்றவை தியாகம் செய்யப்பட்டு, சிந்தனை அடிப்படையிலான அறிவியல் கொள்கைகளுக்கு முரணாக இருக்கின்றது என்றும் கூறினார்".

மெரினா ராஜ் – வத்திக்கான்

# வத்திக்கான் பணியாளர்களுக்கான விடுப்பு, நிதி உதவியில் மாற்றம்

பொருளாதாரத்திற்கான செயலகத்தின் தலைவரால் கையொப்பமிடப்பட்டு, திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆணையானது, வத்திக்கான் பணியாளர்கள் பெறும் நிதி உதவி மற்றும் விடுப்புக்கள் பற்றி எடுத்துரைக்கிறது.

வத்திக்கானில் பணிபுரியும் பெற்றோருக்கான பாதுகாப்புகளையும் உரிமைகளையும் விரிவுபடுத்தி பெற்றோர்வழி விடுப்பு, குறைபாடுகள் உள்ள குழந்தைகளின் பெற்றோருக்கான உரிமைகள், கடுமையான ஊனமுற்ற வழ்நிலைகளில் இருக்கும் குடும்பங்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி, கல்வி உதவி போன்றவற்றில் சில மாற்றங்களை அறிமுகப்படுத்தியுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

குடும்ப நலன்கள் மற்றும் குடும்பங்களுக்கான நிதி உதவிகளை வழங்குவதை நிர்வகிக்கும் விதிகள் குறித்த ஒருங்கிணைந்த சட்டத்தின் சில பத்திகளைத் திருத்தி அமைத்து ஆகஸ்டு 11, திங்கள்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.


வத்திக்கான் பணியாளர்கள் (VATICAN MEDIA Divisione Foto)

மாற்றுத்திறனாளி குழந்தைகளைக் கொண்ட பெற்றோர்களுக்கு மாதத்திற்கு மூன்று நாள்கள் ஊதியத்துடன் கூடிய விடுப்புக்கு உரிமை உண்டு என்றும், இயலாமை மற்றும் நோயின் தீவிரம் குறித்த மருத்துவ மதிப்பீடு பரிசீலனை செய்யப்பட்டு விடுப்பு அளிக்கப்படுகின்றது என்றும் அவ்வாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்ப உதவித்தொகைகளைப் பொறுத்தவரை, வத்திக்கான் பணியாளர்களின் 18 வயதுக்கு மேற்பட்ட சட்டபூர்வமான குழந்தைகள், மாணவர்களாக இருந்தால் 26 வயது வரை அவர்களது பல்கலைக்கழகச் சான்றுதல்களின் உறுதியின்படி நிதி உதவியினைப் பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்திற்கான செயலகத்தின் தலைவரால் கையொப்பமிடப்பட்டு, திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இந்த ஆணையானது, வத்திக்கான் பணியாளர்கள் பெறும் நிதி உதவி மற்றும் விடுப்புக்கள் பற்றி எடுத்துரைக்கிறது.

குழந்தை பிறந்தவுடன் வத்திக்கான் ஊழியர்களுக்கு ஐந்து நாட்கள் ஊதியத்துடன் கூடிய விடுப்பு; மாற்றுத்திறனாளிக் குழந்தைகளின் பெற்றோருக்கு மாதத்திற்கு மூன்று நாட்கள் ஊதியத்துடன் கூடிய விடுப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

மெரினா ராஜ் - வத்திக்கான்

# காஜாங் திருக்குடும்ப தேவாலயத்தில் இறைவார்த்தை ஞாயிறு

சிலாங்கூர், காஜாங் திருக்குடும்ப ஆலய மண்டபத்தில் “இறைவார்த்தை ஞாயிறு விழா” திருவிவிலியப் பணிக் குழுவின் ஏற்பாட்டில் கடந்த ஆகஸ்ட் 3ஆம் தேதி சிறப்பாக நடைபெற்றது. விவிலிய ஆராதனையோடு இறைவார்த்தை ஞாயிறு கொண்டாட்ட விழா களைக்கட்டியது. எங்கள் துணைப்பங்கு தந்தை அருட்பணியாளர் போனாவெஞ்சர் இராயப்பன் சிறப்புரை ஆற்றினார். இறைவார்த்தை உயிருள்ளது என உதட்டளவில் சொல்வதோடு நின்று விடாமல் உள்ளத்தின் ஆழத்தில் அதன் ஆளுமையைக் கொண்டுச் செல்ல வேண்டும் என அவர் வலியுறுத்தினார். விவிலியத்தை வாசித்து, அறிக்கையிட்டு, வாழ்ந்து காட்டினால், அது உயிருள்ள வார்த்தை என்பது தெளிவாகும் என்று காலஞ்சென்ற திருத்தந்தை பிரான்சிஸ் கூறியதை அவர் சுட்டிக்காட்டினார்.

அதனைத் தொடர்ந்து விவிலியப் போட்டிகள் தொடங்கின. இறைவார்த்தை மனனப் போட்டி, கட்டுரை எழுதும் போட்டி, பேச்சுப் போட்டி, பட்டிமன்றம், விவிலியப் புதிர்ப்போட்டி ஆகிய ஐந்து வகையான போட்டி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. போட்டிகளில் சிறியோர் முதல் பெரியோர் வரை பங்குக் கொண்டனர். இறைவார்த்தை மனனப் போட்டியிலும் கட்டுரை எழுதும் போட்டியிலும் அதிகமான இளைஞர்கள் பங்கு பெற்றனர். முத்தாய்ப்பாக விவிலியப் புதிர்ப் போட்டியும் பட்டிமன்றமும் நிகழ்தேறியன. “இயேசுவின் வருகை ஆன்மீக எழுச்சிக்காகவா, சமூகப் புரட்சிக்காகவா” என்பது பட்டிமன்றத் தலைப்பு. பெரியவர்கள் ஆன்மீக எழுச்சி என்ற அணியிலும் இளைஞர்கள் சமூகப் புரட்சி என்ற அணியிலும் வாதத்தை முன்வைத்தனர்.

“இறைவார்த்தை ஞாயிறு” கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு மனநிறைவோடு சென்ற நூற்றுக்கும் அதிகமான மக்களுக்கு வாயிறார சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.






# அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள். யோவான்: 2:5

மகிமை மாதா கியூரியா, மரியாளின் சேனை (தமிழ்), கோலாலம்பூர் மறைமாவட்டத்தின் ஏற்பாட்டில், கடந்த ஆகஸ்ட்டு 2-ஆம் நாளன்று, காலை மணி 8 முதல் மாலை மணி 4 வரை, ஷா ஆலாம், இறை இரக்கத் தேவாலயத்தில், பங்கு தந்தை அருட்பணியாளர் ஜோர்ஜ் ஹெரிக்சன் வழிநடத்துததால் ஒரு நாள் சிறப்பு பயிலரங்கம் நடத்தப்பட்டது.

மிகவும் எளிய முறையிலும், அனைவரும் எளிதாகப் புரிந்துக் கொள்ளும் வகையிலும் அன்னை மரியாளின் பங்கெடுப்பு, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மகத்துவம் ஆகியவை குறித்து தெள்ளத்தெளிவாக விளக்கினார்.

முதல் பகுதியில், கானாவூர் திருமணம் குறித்து விவரித்த அவர், தொடர்ந்து 7 நாட்களாக நடைபெற்ற அந்த திருமண விழாவில் நடைபெற்ற அதியங்கள், அதற்கு வித்திட்ட அன்னை மரியா, ‘அவர் உங்களுக்குச் சொல்வதையெல்லாம் செய்யுங்கள்’ என்ற அன்னையின் வேண்டுகோளானது புதிய ஏற்பாட்டின் விசுவாசத்தின் தொடக்கம் என்பதையும் மக்கள் விசுவாசமே நம் வாழ்க்கையில் நிகழவிருக்கிற அதிசயங்களின் திறவுகோல் என்பதையும் கோடிட்டுக்காட்டினார். அன்னையின் சிறப்புகளான அவரது பரிவிரக்கம், பொதுநலம், பிறர் நலனில் அக்கறை, தன்னிடம் வேண்டுபவர்களுக்காக இறைவேண்டல் செய்வது, அளவற்ற அன்பு ஆகிய பண்புகளைக் குறித்தும் விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்கம் அளித்தார்.

இதனிடையே, இந்த ஜூப்லி ஆண்டின் முக்கியத்துவம், நங்கூரம், அவற்றை விளக்கினார்.

திருச்சிலுவை நான்கு திசைகளைக் கொண்டிருப்பது போல, நற்செய்தி புத்தகங்களான, மத்தேயு, மாற்கு, லூக்காஸ், யோவான் ஆகிய நான்கு திசைகளாக கிறிஸ்துவர்களின் வழிகாட்டுதலாக இருக்கின்றன என தெரிவித்த அவர், திரு அவையின் இரு தூண்களாக திருவிவிலியமும், திருஅவையின் பாரம்பரியமும் உள்ளன என்று தெளிவுப்படுத்தினார்.

லூக் : 1:38 - "நான் ஆண்டவரின் அடிமை. உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்.” அன்னை மரியாள் கடவுளின் வார்த்தைக்கு, ‘ஆம்’ என்று பதில் கொடுத்து உலகின் மீட்புக்குத் துணையானார். நாம் இவரை இறைவனின் தாய் என்றும், முதல் சீடர் எனவும், புதிய ஏவாள் என்றும் அறிந்திருக்கிறோம். மேலும் அன்னை மரியாள் மீது கத்தோலிக்கர்கள் பற்றுறுதியாய் இருப்பதன் அவசியத்தையும் தெளிவாக விளக்கினார். குடும்ப வாழ்வில் அன்னையின் பங்கெடுப்பையும், இன்றைய உலகில் பெற்றோர் பிள்ளைகள் உறவிலும், திருமண வாழ்க்கையிலும், திருஅவையிலும் அன்னையின் பண்புகள் முக்கிய பங்கு வகித்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இறுதியாக, வியாகுல அன்னையின் ஏழு துயரங்களை விவரித்துக் கூறிய பங்குத் தந்தை, நாம் படும் துன்ப துயரங்களில் அன்னையின் துயரத்தல் ஆறுதல் அடைகிறோம், அன்னையின் ஜெப உதவியோடு அதை ஏற்றுக் கொண்டு கிறிஸ்துவின் பெயரால் விடுதலை அடைகிறோம் என விளக்கினார். பல நல்ல கருத்துக்களை நகைச்சுவையோடும், சிந்திக்கும் வகையிலும் மக்கள் மனதில் பதியும் வண்ணமும் பகிர்ந்துக் கொண்டு கலந்துக் கொண்டவர்களை உற்சாகப்படுத்தினார் என்றால் அது மிகையாகாது.






சுமார் 170 விசுவாசிகள் 11 பங்குகளிலிருந்துக் கலந்து பயன் பெற்றனர். பங்கு தந்தை அவர்களுக்கும், அருட் சகோதரி மேரி டேவிட் அவர்களுக்கும், இறை இரக்க தேவாலய தமிழ் அப்போஸ்தலர் பணிக்குழுப் பொருப்பாளர்களுக்கும், அனைத்து வகையிலும் உதவிக்கரம் நல்கிய யாவருக்கும் ஒருங்கிணைப்பாளர் சகோதரர் லோரன்ஸ் நன்றி கூறினார்.

அனுப்பியவர்.
எலிசபெத் அந்தோணி
டேசா ஜெயா

# 20ஆம் ஞாயிறு – 24-08-2025

**எசா 66:18-21, எபி 12:5-7,11-13, லூக் 13:22-30**
**அர்ப்பண வாழ்வு**

திருஅவை இன்று பொதுக்காலத்தில் 21ஆம் ஞாயிறைக் கொண்டாடுகிறது.

இன்றைய மூன்று வாசகங்களும் மீட்புப் பெறுவோர் யார்? சிலரா? பலரா? என் இனத்தவரா? என் மொழிக்காரரா? என் நாட்டவரா? எனும் கேள்விகளுக்கு பதில் காணும் வாசகங்கள்.

இஸ்ராயேல் குலம் மட்டும் மீட்பு அடையும் என்ற எண்ணம் யூதர்கள் மத்தியில் பரவலாகவே இருந்தது. அதிலும் குறிப்பாக பரிசேயர்கள் குழுவே முதன்மை வகித்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் என்பதால் மீட்பு அடைந்துவிட முடியுமா? புறவினத்தான் என்பதால் புறம் தள்ளிவிடமுடியுமா? மீட்பில் பாகுபாடு இல்லை எனும் ஆழமான கருத்தை விளக்குகிறது முதல் வாசகம்.

இரண்டாம் வாசகத்தில் தந்தை மகனை அறிவுருத்துவதும் கண்டிப்பதும் நல்வழிக்கு கொண்டு வருவதற்கே. அக்கறைக் கொண்ட தந்தை தாம் ஏற்றுக்கொண்ட பிள்ளைகளைத்தான் கண்டிக்கிறார்.

நற்செய்தியில் ஒரு உவமையை கூறி இறையாட்சியின் செயல்பாடுகள் பற்றி வெளிப்படுத்துகிறார். ஞானஸ்நானத்தின் வழி நான் ஒரு நிலையான கிறிஸ்தவன், நிரந்தர உறுப்பினன், இயேசுவின் சீடன் என்பது மட்டும் போதாது. மாறாக இன்றைய நற்செய்தில் வாசிக்கும் ‘ஒடுக்கமான வாயில்’ வழியாக நுழைந்து சென்று இறையாட்சியைத் தேடுபவர்களே இயேசுவின் சீடர்கள்.

ஒடுக்கமான வாயில் என்பது உலக வழியல்ல மாறாக கிறிஸ்துவின் வழி என்பதையும் அவரது போதனையை பின்பற்றுவது சிரமமானது, சிலுவைகள் நிறைந்தது, துன்பகரமானது என்பதையும் நமக்கு நினைவுபடுத்துகிறது.

ஆக, எந்த துன்பம் வந்தாலும் அதை எதிர்கொண்டு, நல்ல உறவுக்காக தியாகங்கள் செய்து, துணிந்து வாழ்ந்து எந்தவொரு நிலைபாட்டையும் அர்ப்பண வாழ்வில் இயேசுவின் ஜெருசலேம் பயணத்தை நினைவுகூர்வோம்.

இயேசு ஆண்டவர் கூறிய ‘கடைசியானோர் முதலாவோர்’ என்பது யூதர்களின் எதிர்பார்ப்பை தகர்த்தெரிகிறது. யூதர்கள் மத்தியில் தாங்களே மீட்புக்கு முதலிடம் பெறுபவர்கள் என்ற இறுமாப்பு இருந்தது. உங்களைக் காட்டிலும் என் போதனையை ஏற்றுக்கொண்ட பிற இனத்தார் முதன்மை பெறுவர் என இயேசு எடுத்துரைக்கின்றார்.எனவே நாமும் ஆதி கிறிஸ்தவர்கள், பிறப்பால் கிறிஸ்தவர்கள், மீட்புக்கு முதன்மை தகுதி பெற்றவர்கள் என்று பெருமை பாராட்டாமல் தாழ்ச்சி மனப்பான்மை கொண்டவர்களாய் கிறிஸ்துவை பின்பற்றுவோம்.

ஆ.வி.டேவிட்.

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.